**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 106/2019 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | திருமதி. லெட்சுமி |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of November 2025.

நான் பனையன்குளத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய அம்மா. ஆஜர் எதிரிகளை தெரியும். என்னுடைய உறவினர்கள். வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. வழக்கு பற்றி எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 21.02.2018 ஆம் தேதி காலை 05.00 மணியளவில் ராமகிருஷ்ணர் கோனார் வயலில் அ.சா.1 மாடு மேய்த்துக்கொண்டிருந்தபோது எதிரிகள் அ.சா.1 யை கெட்ட வார்த்தையில் பேசி, கம்பால் அ.சா.1 ன் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தியதாகவும், பொது இடத்தில் வைத்து அ.சா.1 ன் பெண்மைக்கு களங்கம் ஏற்படுத்தியதாகவும், வழக்கு சம்பவத்தை நீங்கள் நேரடியாக பார்த்ததாகவும், போலிசாரிடம் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் உண்மைக்கு மாறாக

எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | | |
|---|---|---|
| **IN THE COURT OF** | | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | } | CC.No. 106/2019 |
| Deposition Of Witness for | { | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | | திருமதி. முப்பிடாதி |
| Husband Name / Father's Name | | |
| Village | | |
| Taluk | | |
| Religion | | Muslim/Christian/Hindu |
| Age | | /2025 |

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of November 2025.

நான் பனையன்குளத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். என்னுடைய உறவினர்கள். காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது தான் அது <u>அ.சா.ஆ.1</u> ஆகும். வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை. எதிரியுடன் சமாதானமாக செல்கிறேன். வழக்கு பற்றி எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

எதிரிகளுடன் சமாதானமாக செல்வதாக மனுதாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். கடந்த 21.02.2018 ஆம் தேதி காலை 05.00 மணியளவில் ராமகிருஷ்ணர் கோனார் வயலில் நீங்கள் மாடு மேய்த்துக்கொண்டிருந்தபோது எதிரிகள் உங்களை கெட்ட வார்த்தையில் பேசி, கம்பால் உங்களது தலையில் அடித்து காயம் ஏற்படுத்தியதாகவும், பொது இடத்தில் வைத்து உங்களுடைய பெண்மைக்கு களங்கம் ஏற்படுத்தியதாகவும், போலிசாரிடம் புகார் வாக்குமூலம் அளித்துவிட்டு,

விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகள் உறவினர்கள் என்பதாலும் அவர்களுடன் சமரசமாக செல்வதாலும் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.